Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 27 2024

புதன்கிழமை, நவம்பர் 27, 2024 | ஒளி: 10 கதிர் 102 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

### ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி

# கிழக்குக்கு அருகில் நகரும்

## 55,561 பேர் பாதிப்பு: கடும் எச்சரிக்கை விடுவிப்பு



தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தால். தீவின் பல பகுதிகளில் மோசமான வானிலை நிலவுகிறது.

மீனவ மற்றும் கடல்சார் சமூகத்தினருக்கு மறு அறிவித்தல் வரை தீவைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் மீன்பிடி அல்லது கடற்பயண நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும், புத்தளம் மாவட்டத்திலும் சில இடங்களில் 200 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# 3 நாட்களுக்கு பரீட்சைகள் இல்லை

தற்போது நிலவும் மோசமான காலநிலையை கவனத்தில் கொண்டு, கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளை எதிர்வரும் மூன்று நாட்களுக்கு நடத்தாமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27,28 மற்றும் 29ஆம் திகதிகளில் நடத்துவதற்கு ஏற்கெனவே, திட்டமிடப்பட்டிருந்த பரீட்சைகளே பிற்போடப்பட்டுள்ளன.

அவ்வாறு பிற்போடப்பட்டுள்ள பரீட்சைகள், அடுத்தமாதம் 21,22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலையால், நாட்டின் தாழ்நில பிரதேசங்களில் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. அத்துடன், மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளது. இதனால், பரீட்சை மத்திய நிலையங்களுக்கு செல்வதற்கு பரீட்சார்த்திகள் கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

# இந்தியாவுக்குப் பின் சீனாவுக்குச் செல்வார்

தேசிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் தலைவரும், புதிய ஜனாதிபதியுமான அனுரகுமார திசாநாயக்க, இந்திய விஜயத்தின் பின்னர் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்

இலங்கைக்கான சீன தூதுவர் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளார் என என அமைச்சரவை பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ, அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், செவ்வாய்க்கிழமை (26) நடைபெற்ற, வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# அர்ச்சுனாவுக்கு பிடியாணை

யாழ். மாவட்ட சுயேச்சை பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் அர்ச்சுனா இராமநாதனுக்கு பிடியாணை பிறப்பிக்க கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுளா ரத்நாயக்க, செவ்வாய்க்கிழமை (26) உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஊடாகவே இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அர்ச்சுனா இராமநாதன் எம்.பி, 2021 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதியன்று கொழும்பு- பேஸ்லைன் வீதியில் காரை மோதி நபருக்கு பலத்த காயம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜராகாத காரணத்தினால் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# இன்று மாவீரர் நாள்: அனுஷ்டிக்க நிபந்தனை

வடக்கில் உள்ள மக்கள் மாவீரர் நாளை அனுஷ்டிக்க அனுமதித்துள்ள போதிலும், தடை செய்யப்பட்ட அமைப்பான விடுதலைப் புலிகள் தொடர்பான இலச்சினைகள், சீருடைகள், படங்கள் போன்றவற்றை காட்சிப்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நாட்டின் உள்நாட்டுப் போரின் போது உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூருவதை அரசாங்கம் தடுக்காது என அமைச்சர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும்,

தொடர்ச்சி P2

# ஜனாதிபதியை சந்தித்தார் சீன உப அமைச்சர்



சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் சர்வதேச திணைக்கள (IDCPC) உப அமைச்சர் சன் ஹையன் (Sun Haiyan) தலைமையிலான சீன தூதுக்குழு ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை திங்கட்கிழமை (25) சந்தித்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க பெற்ற வெற்றிக்கும், பொதுத் தேர்தலில் அவரது கட்சிக்கு கிடைத்த அமோக வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்த சீன உப அமைச்சர், இந்த வெற்றிகளின் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள பரிமாற்றங்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயகவின் தலைமையில் இலங்கையுடன் நெருக்கமான ஒத்துழைப்புடன் செயல்பட சீனா தயாராக இருப்பதாகவும் உப அமைச்சர் தலைமையிலான குழுவினர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்..

தொடர்ச்சி P2

### ஜனவரி– ஏப்ரல் செலவுக்கு

# Vote on Account

2025 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரைக்கும் அரச பணிகளையும் மற்றும் அரச கடன் சேவைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்காக 'நிதியொதுக்கீட்டுக் கணக்கு மீதான வாக்குப்பணம்'(Vote on Account) பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், திங்கட்கிழமை (25) கூடிய வாராந்த அமைச்சரவைக்கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், செவ்வாய்க்கிழமை (26) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் போதே அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நலிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# "டியூசன்களை இடைநிறுத்துக"

அஸ்லம் எஸ்.மௌலானா

தற்போது நிலவும் காலநிலை சீர்கேட்டினால் ஏற்படக் கூடிய அனர்த்த அபாய நிலைமையைக் கருத்திற் கொண்டு, மாணவர்களின் நலன்கருதி இந்த சீர்கேடான காலநிலை வழமைக்குத் திரும்பும் வரையிலும் தனியார் கல்வி நிலையங்களில் டியூசன் வகுப்புகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கல்முனை மாநகர சபை அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ், தனியார் கல்வி நிலையங்களின் நடத்துனர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்திருப்பதாவது;

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் தாழமுக்க காலநிலை சீர்கேடு காரணமாக ஏற்படவுள்ள அனர்த்த அபாய நிலைமை தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள சிவப்பு எச்சரிக்கையைக் கருத்தில் கொண்டு அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆலோசனையின் பேரில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பலத்த மழை, வெள்ளம், அதிக காற்று மற்றும் அனர்த்தங்களினால் எமது மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதக விளைவுகள் மற்றும் அசௌகரியங்களை முழுமையாக தவிர்த்து அவர்களது நலன்கள் மற்றும் பாதுகாப்புக்கு நாம் பொறுப்புக் கூற கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆகையினால் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலையங்களிலும் மேற்படி இரு தினங்களும் டியூசன் வகுப்புகளை இடைநிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு அவற்றின் நடத்துனர்கள் மற்றும் ஆசிரியர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# கிழக்குக்கு அருகில் நகரும்

தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்பைச் சூழவுள்ள காற்றமுத்த தாழ்வு நிலை திங்கட்கிழமை (25) இரவு 11.30 மணியளவில் மட்டக்களப்பில் இருந்து கி.மீ. 290 கி.மீ மற்றும் திருகோணமலைக்கு. 410 புயல் தென்கிழக்கு திசையில் நிலைகொண்டுள்ளதாகவும், இது அடுத்த 12 மணித்தியாலங்களில் வடமேற்கு நோக்கி நகர்ந்து ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி தீவின் கிழக்கு கடற்கரைக்கு மிக அருகில் நகரும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் செவ்வாய்க்கிழமை (26) அறிவித்துள்ளது.

இதன் தாக்கம் காரணமாக எதிர்வரும் சில தினங்களில் நாட்டின் பல பகுதிகளில் கடும் மழை மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவும் எனவும் இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும் புத்தளம் மாவட்டத்திலும் சில இடங்களில் 200 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகவும், காற்றின் வேகமானது மணிக்கு 60-70 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும், இந்த நிலை அடுத்த சில நாட்களுக்கு தொடரலாம்.

தீவின் கரையோரப் பகுதிகளுக்குச் செல்லும் மக்களும், அடையாளம் காணப்பட்ட மண்சரிவு அபாயப் பகுதிகளில் வாழும் மக்களும் இது தொடர்பில் அவதானம் செலுத்துவதுடன், வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்துள்ள அறிவிப்புகள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில், நாடளாவிய ரீதியில் உள்ள 73 நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் கடும் மழை காரணமாக 65 சதவீதத்தை தாண்டியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் உள்ள 73 நீர்த்தேக்கங்களில் 23 நீர்த்தேக்கங்கள் மற்றும் பெரும்பாலானவைகளில் நடுத்தர அளவில் வான் கதவுகள் திறக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை, அநுராதபுரம், பதுளை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு இதுவரை 50 சதவீதத்தை தாண்டியுள்ளது.

ஹம்பாந்தோட்டை, காலி, கண்டி, குருநாகல் மற்றும் மொனராகலை மாவட்டங்களில் 80 சதவீதத்திற்கும் அதிகமான நீர் கொள்ளளவு பதிவாகியுள்ளது. பொலன்னறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களின் நீர் கொள்ளளவு 70 சதவீதமாகவும், திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களின் நீர் கொள்ளளவு 45 தவீதமாகவும் உள்ளது.

இதன் காரணமாக நாட்டின் 73 பிரதான குளங்களின் மொத்த நீர் கொள்ளளவானது 65 சதவீதத்தை தாண்டியுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. இதேவேளை அனுராதபுரம் மாவட்டத்தின் ராஜாங்கனை ஏரியின் 6 வான்கதவுகள் இதுவரை திறக்கப்பட்டுள்ளதுடன் கலா ஏரிக்கு வினாடிக்கு 4,498 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதாக நீர்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மோசமான காலநிலை காரணமாக, புத்தளம், இரத்தினபுரி, கேகாலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, காலி, நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களில் மட்டும், 15,713 குடும்பங்களைச் சேர்ந்த, 55,561 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், செவ்வாய்க்கிழமை (26) மாலை விடுத்திருந்த புள்ளிவிபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மைத்திரியிடம் வாக்குமூலம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு இன்று (26) வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

ரோயல் பார்க் கொலைக் குற்றவாளிக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதற்காக முன்னாள் ஜனாதிபதி இலஞ்சம் பெற்றதாக எழுந்த குற்றச்சாட்டின் பேரில் விசாரணைக்காக அவர் அழைக்கப்பட்டதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## இந்தியாவுக்குப் பின் சீனாவுக்குச் செல்வார்

டிசெம்பர் மூன்றாவது வாரத்தில் ஜனாதிபதி இந்தியாவுக்கான தனது பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அவர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு விஜயம் எனினும், இதற்கான திகதி தீர்மானிக்கப்படவில்லை என அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்திய விஜயத்தின் பின்னர் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, சீனாவிற்கு விஜயம் மேற்கொள்வார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



## இன்று மாவீரர் நாள்: அனுஷ்டிக்க நிபந்தனை

அத்தகைய நினைவேந்தல் சட்ட விதிமுறைகளுக்கு இணங்க வேண்டும் மற்றும் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத குழுவுடன் எந்த தொடர்பும் தவிர்க்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

"விடுதலைப் புலிகள் ஒரு நியமிக்கப்பட்ட பயங்கரவாத அமைப்பாகும், நவம்பர் 27 அன்று மாவீரர் நாளின் போது அவர்களின் அடையாளங்கள், சீருடைகள் அல்லது அவர்களின் உறுப்பினர்களின் படங்களை காட்சிப்படுத்த எந்த அனுமதியும் இல்லை," என்று அவர் கூறினார்.

சில குழுக்கள் கடந்த கால நினைவு தினங்களை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் மீள் விளக்கமளிக்க முற்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நினைவுகூருவதற்கான உரிமை மற்றும் நாட்டின் சட்டக் கட்டமைப்பு ஆகிய இரண்டையும் மதித்து, சட்டத்தின் எல்லைக்குள் நினைவேந்தல்களை நடத்துமாறு பொதுமக்களை அவர் வலியுறுத்தினார்.

மாவீரர் நினைவேந்தல் வாரத்தின் முதல் நாளைக் குறிக்கும் வகையில் நவம்பர் 21ஆம் திகதியிலிருந்து வடக்கு கிழக்கு முழுவதும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

# Vote on Account

2024.11.21 அன்று புதிய பாராளுமன்ற கூடினாலும், 2025 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டுச் சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசியல் யாப்பில் விதிக்கப்பட்டுள்ள படிமுறைகளைக் கையாள்வதற்குப் போதியளவு நேரம் இல்லை. அதனால், 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 23(1) உபபிரிவில் குறிப்பிட்டவாறு 2025 ஆம் ஆண்டின் முதல் 04 மாதகாலப்பகுதிக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் அரச சேவைகளை மேற்கொண்டு செல்வதற்குத் தேவையான நிதியொதுக்கீடு செய்வதற்காக 'கணக்கின் மீதான வாக்குப்பணம்'(Vote on Account) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

அதற்கமைய, அரச மீண்டெழும் செலவுகள், மூலதனச் செலவுகள், அரச கடன் சேவைகள் மற்றும் கடன் மீள்கட்டமைப்புக்கான செலவுகள் உள்ளடங்கிய 2025 ஆண்டுக்கான 04 மாத காலத்திற்கு 'நிதியொதுக்கீட்டுக் கணக்கின் மீதான வாக்குப்பணத்தை' தயாரிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## ஜனாதிபதியை சந்தித்தார் சீன உப அமைச்சர்



சீனா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளின் அபிவிருத்தி வாய்ப்புகள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன் இரு நாடுகளுக்கும் இடையில் பரஸ்பர நன்மை பயக்கும் நீண்ட கால ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

முதலீட்டு ஊக்குவிப்பு, தொழில்நுட்ப பரிமாற்றம், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளில் இலங்கைக்கு ஆதரவளிக்க சீனா தயாராக இருப்பதாக தூதுக் குழுவினர் தெரிவித்தனர்.

குறிப்பாக கல்வித்துறையில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்து இலங்கையின் மனிதவள மேம்பாட்டை மேம்படுத்தும் சீனா ஆதரவு வழங்கும் என்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர்.

சீன அரசாங்கம் இலங்கைக்கு வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

■ எஸ். தில்லைநாதன்

நெடுந்தீவு கடற்பரப்பில் இம்மாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23 பேரையும் டிசெம்பர் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சீ ஒவ் ஶ்ரீலங்கா எனப்படும் இலங்கை-நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த 10ஆம் திகதி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 23 இந்திய மீனவர்களை கைதுசெய்த கடற்படையினர் கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் மயிலிட்டி துறைமுகத்தில் வைத்து மறுநாள் (11) ஒப்படைத்தனர்.

அவர்களை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இன்றைதினம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் 23 மீனவர்களையும் முன்னிலைப்படுத்தியபோது அவர்களை டிசெம்பர் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டார்.

## "எம்.பியாக நியமிக்காவிடில் தன்னுயிரை மாய்ப்பேன்"

தன்னை தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு நியமிக்காவிட்டால் தற்கொலை செய்து கொள்வேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் அமரசேன தெரிவித்துள்ளார்.

"நான் இந்த ஆண்டு பொதுத் தேர்தலில் 40,000 க்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றேன். எனவே, என்னை தேசிய பட்டியலிலிருந்து நியமிக்க வேண்டும். நான் ஏற்கனவே கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் பேசியுள்ளேன், அவர் எனது கோரிக்கைக்கு செவிசாய்ப்பார் என்று நான் நம்புகிறேன். என்னை சபைக்கு நியமிக்காவிட்டால் எனது வாழ்க்கையை முடித்துக் கொள்வேன்" என அமரசேன ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

தேசியப் பட்டியல் மூலம் தங்களை நியமிக்க வேண்டும் என்று பலர் கோரிக்கை விடுத்து வருவதால், கட்சித் தலைவர் ஆதரவற்ற நிலைக்கு ஆளாகியுள்ளார்.

## "இனம், மதம், சாதி அடிப்படையில் அமைச்சரவை அமைக்கப்படவில்லை"

அமைச்சரவை இனம், மதம் அல்லது சாதி அடிப்படையில் அமைக்கப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அண்மைய அமைச்சரவை நியமனங்களில் முஸ்லிம் பிரதிநிதிகள் இல்லாமை குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், செவ்வாய்க்கிழமை (26) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில், கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சரவை பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாங்கள் இனம், மதம் அல்லது சாதி அடிப்படையில் அமைச்சரவையை அமைக்கவில்லை. அமைச்சு அதிகாரங்களை கையாள்வதில் மிகவும் திறமையான நபர்களை நாங்கள் தேர்ந்தெடுத்தோம்," என்று அவர் கூறினார்.

மேல் மாகாண ஆளுநராக முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், பிரதி சபாநாயகர், பிரதி அமைச்சர் போன்ற பதவிகளை முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வகிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.







## கலை விழாவும் பட்டமளிப்பும்

திருகோணமலை ப்ரயிஸ் பூல் (Praise Pool)) சர்வதேச முன் பள்ளியின் வருட இறுதி கலை விழாவும், பட்டமளிப்பு விழாவும் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (24) இடம்பெற்றது.

இதன்போது, விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, மாணவர்களினுடைய கலை நிகழ்வுகள் மற்றும் மாணவர்களுக்கான பட்டமளிப்பு இடம்பெற்றுள்ளது.











### இறந்த மக்களை நினைவு கூர்தல் தினத்தை

# “பொது விடுமுறை தினமாக அறிவிக்கவும்”

யுத்தத்தில் உயிரிழந்தந்தவர்களை நினைவு கூருவதற்கு தடை இல்லை என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்திருப்பதை பாராட்டியுள்ள சர்வதேச இந்துமத பீட செயலாளர் சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, இறந்த பொது மக்களை நினைவு கூறும் தினத்தை ஒரு பொது விடுமுறை நாளாக பிரகடனப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேவேளை, யுத்தக் காலத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். இந்த உயிரிழப்புகளை வருடம்தோறும் அவர்களுடைய உறவுகளை நினைவுகூர்ந்து வருவதைத் தமிழ் மக்கள் தங்கள் மத அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்து வருவது வழமையானதாகும். இறந்த பொதுமக்களை நினைத்து



நினைவுகூருவது என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு புதிய அரசு நடப்பது தமிழ் மக்களால் வரவேற்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையில், இறந்த பொது மக்களை நினைவு கூரும் தினத்தை ஒரு பொது விடுமுறை நாளாக அறிவித்தால் நிச்சயமாக அது தமிழ் மக்களால் அது வரவேற்கப்படும்.

அதேவேளை, வடக்கில் பல காலமாகப் பூட்டப்பட்டிருந்த வசாவிலான்- பலாலி பாதை திறப்பு ஒரு வரவேற்கத்தக்க விடயமாகும்.

படிப்படியாக இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு மக்களை இயல்பான நிலைக்குக் கொண்டு வருவதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கை பாராட்டத்தக்க விடயம். ஒரு சிலர் தேசிய ரீதியான பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று எதிர்த் தரப்பினர் பிரச்சாரம் செய்தாலும், நாட்டின் யதார்த்தம் நிலையை உணர்ந்து அரசு எடுக்கும் நடவடிக்கை நிச்சயமாகத் தமிழ் மக்களால் வரவேற்கப்படும் இந்த நிலையில், யுத்த காலத்தில் இறந்தவர்களை நினைவு கூறுவதற்கு ஒரு பொது நாள் ஒன்றை அரசு ஒதுக்கி தருமாகயிருந்தால், நிச்சயமாக உலக வாழ் தமிழ் மக்கள் வரவேற்பார்கள்.

அத்துடன், வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் மனதை வெல்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் இது அமையும். இது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் சக வாழ்வுக்கும் வழிவகுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# சமூக பாதுகாப்பு குழுக் கூட்டம்

பாறுக் ஷிஹான்

பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலிஸ் சமூகப் பாதுகாப்புக் குழு அங்கத்தவர்களுக்கான கூட்டம் மருதமுனை-சம்ஸ் மத்திய கல்லூரி மருதூர் கனி விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

பெரியநீலாவணை பொலிஸ் சமூகப் பாதுகாப்புக் குழுவின் தலைவர் இசட்.சாஜித் முனீர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரி. எச். டி. எம். எல். புத்திக மற்றும் பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வீரசிங்க சிவில் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட கிராமங்களின் பொலிஸ் சமூகப் பாதுகாப்புக் குழு அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தற்போது கிராமங்களில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்கள் போதைப்பொருள் பாவனை,விற்பனை, மற்றும் சமூக சீர்கேடு தொடர்பான விடயங்கள், அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் தொடர்பாக பொலிஸாரினால் அறிவுறுத்தப்பட்டது.



# இரட்டையரில் ஒருவர் மாயம்



ஒரே கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த இரட்டை சகோதரர்களில் ஒருவர் திடீரென காணாமல் போயுள்ள சம்பவம் மில்லனிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பண்டாரகம - பல்லந்துடாவ ஸ்ரீ ஞானரதன வீதியைச் சேர்ந்த, மொரட்டுவ கட்டுபெத்த ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரியில் கல்வி பயிலும் 21 வயதுடைய சானுக கிம்பார பெரேரா என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

குறித்த இரட்டை சகோதரர்கள் ஞாயிற்றுக்கிழமை (24) அன்று வழமைபோல, தனது பெற்றோருடன் உணவருந்திவிட்டு அவர்களின் அறைக்குச் சென்றுள்ளதுடன், காணாமல்போயுள்ள இளைஞன் தனது கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில், ஒரு சகோதரர் உறங்கியுள்ளார்.

திங்கட்கிழமை (25) அதிகாலை 4.30 மணியளவில் இருவருக்கும் உணவு சமைப்பதற்காக எழுந்த தாய், வீட்டின் கதவு பாதி திறந்து கிடந்ததைக் கண்டு மூடிவிட்டு, இரு மகன்களும் உறங்கிக் கொண்டிருந்த அறையைப் பார்த்த போது, மூத்த மகனைக் காணவில்லை என அவர் அளித்த புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.


# கம்பஹா பிரதேச சபை

## விலைமனுக்கள் விளம்பரம்

கம்பஹா பிரதேச சபைக்கு சொந்தமான மிட்சுபிஷி எல்-200 வண்டிக்கு புதிய இயந்திரம், முன் பக்க கெபின் மற்றும் பின்பக்க களஞ்சிய பெட்டி விநியோகிப்பதற்கும் பழுதுபார்ப்பதற்கும் மற்றும் பிற பழுதுபார்ப்புகளை மேற்கொள்வதற்கும் நவீனமயப்படுத்துவதற்கும் அனுபவமுள்ள அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளது. அந்த விலைமனு விண்ணப்பத்தை அசல் மற்றும் நகலாக தயாரிக்கப்பட்ட 02 ஐ 2024.12.13 ஆம் திகதி அன்று மு.ப 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பதிவு தபாலில் அனுப்பலாம் அல்லது கையில் கொண்டு வந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஏலப் பெட்டியல் இட முடியும் அல்லது சமர்ப்பிக்க முடியும். இதற்கான ஏல ஆவணங்கள் 2024.11.27 ஆம் திகதி முதல் 2024.12.12 ஆம் திகதி மு.ப 11.00 மணி வரை உள்ள வேலை நாட்களில் கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் சரிபார்க்க முடியும்.

2. விலைமனுக்கள் திறப்பது கூறப்பட்ட ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும், அந்த நேரத்தில் நீங்கள் அல்லது உங்கள் மூலம் எழுத்துமூலம் அனுமதியைப் பெற்ற பிரதிநிதி இந்த நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
3. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் படிவங்கள் 2024.11.27 ஆம் திகதி முதல் 2024.12.12 ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை திரும்பப்பெற முடியாத கட்டணமாக ரூ.1000.00 ஐ இந்த அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
4. விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் “வாகனங்கள் பழுதுபார்ப்பதற்கான கட்டணங்கள்” என்று குறிப்பிடப்பட வேண்டும்.
5. பழுதுபார்க்கும் வேலை தொடர்பான பில்கள் பரிந்துரைக்கப்பட்ட விவரக்குறிப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து மட்டுமே தீர்வு செய்யப்படும்.
6. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட ஏலத் தொகையின் 1% மதிப்பிற்கு சமமான வங்கி உத்தரவாதத்தை (BID BOND) சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.
7. இந்த நிறுவனத்தின் கொள்முதல் குழுவிற்கு ஏலங்களை ஏற்க அல்லது நிராகரிக்க அதிகாரம் உள்ளது.
8. இந்த நிறுவனத்தின் கொள்முதல் குழுவிற்கு தேவையான சந்தர்ப்பங்களில் விலையை திரும்பப் பெறும் அதிகாரமும் உள்ளது.

2024.11.26 ஆம் திகதி

**கம்பஹா பிரதேச சபை மூலம்**
**தொலைபேசி இல: 033 22 22020 – 033 22 20145**

**எஸ். ஏ.என்.பீ.சுரவீர**
**செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபை**
**அதிகாரங்கள், செயல்பாடுகள், கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**கம்பஹா பிரதேச சபை.**

# பிள்ளைகளின் மனதை சித்திரவதை செய்ய உரிமை இல்லை

புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்கள் மதிப்பிடல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவின்படி, தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்புகள் குறித்து விமர்சிக்க முடியாது. எனினும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

புலமைப்பரிசில் இந்த நாட்டில் வளங்கள் விநியோகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளில் இருந்து பிறந்தது. அனைவருக்கும் சமமாகப் பயனளிக்கும் வகையில் வளங்களைப் பகிர்ந்தளிப்பதற்குப் பதிலாக, கிடைக்கும் இடத்திற்கேற்ப போட்டியைக் கொடுத்து பிள்ளையை வழிநடத்தும் எளிதான வழியாக புலமைப்பரிசில் கருதலாம். இதன் மூலம் கல்விப் பாடத்தில் சமூகத்தின் அசௌகரியம் வெளியேறுகிறது.

அனைத்துப் பாடசாலைகளையும் கொழும்பு-7 பாடசாலைகளாக மாற்றாவிட்டாலும், புறநகர்ப் பிரதேசங்களில் சுமார் நூறு பாடசாலைகள் இனங்காணப்பட்டு அவற்றை அபிவிருத்தி செய்யவேண்டும். அதனூடாக பிள்ளைகளுக்கு நல்ல கல்வியைக் கொடுக்கமுடியும்.

இந்த நாட்டில் கல்வி பற்றி நிறையப் பேசுவதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம், ஆனால், முதலில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளுக்கு இதுவரை எந்த பதிலையும் காணவில்லை. மாறாக, நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் அல்லது முதலீட்டு வாரிய ஒப்பந்தங்களின் கீழ் சர்வதேச பாடசாலைகளை அனுமதிக்க ஆட்சியாளர்கள் போராடினர்.

நல்ல வளம் கொண்ட பாடசாலைகள் உள்ளன. இவர்களுக்குக் கொழும்பு-07 பாடசாலை போன்று தொடர் வசதிகள் செய்து கொடுக்கப்படாததால், சில சமயங்களில் நல்ல நிலைக்குத் தள்ளப்பட்டு இப்போது எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளன. இலங்கையின் 10,096 பாடசாலைகளில் முப்பத்தொன்பது இலட்சத்திற்கும் அதிகமான பிள்ளைகள் கல்வி கற்கிறார்கள்.

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் செயல்பாட்டில் ஒரு கட்டத்தில் நடந்த தவறு காரணமாக, அந்த வகுப்பில் உள்ள சிறு பிள்ளைகளும், தாய், தந்தையரும் தான் தவிக்கின்றனர். பிரச்சினைகளைத் தவிர்க்க ஒரு குழு மூலம் அரசு முடிவு எடுத்தது. இந்த நிலைமைக்குச் சிறந்த தீர்வு அங்குதான் உள்ளது. கசிந்த சில வினாக்களுக்குச் சமமான மதிப்பெண்கள் கொடுத்து, அங்கிருந்து முன்னோக்கிப் பார்க்கும் அளவு நியாயமானது.

எனினும், அப்பரீட்சையை மீண்டும் நடத்தவேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. இடையில் தீர்வுகள் இல்லாததால், இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்வு எழுதிய இளம் மனங்கள் குழம்பாத வகையில் தேர்வு செய்யப்பட வேண்டும். இப்போது பிள்ளைகளின் மனம் கலங்கும் விதத்தில் சுழன்று கொண்டிருக்கிறது.

பரீட்சை பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதால், பிள்ளைகள் மீண்டும் அச்சமடைந்துள்ளனர். கசிந்த கேள்விகளுக்கு மதிப்பெண்கள் வழங்குவதே இறுதித் தீர்ப்பாக இருக்கலாம். அதற்காகப் பிள்ளைகளின் மனதை இப்படி சித்திரவதை செய்யப் பெரியவர்களான நம்மில் யாருக்கும் உரிமை இல்லை. விஷயங்களை இழுத்துச் செல்வதற்குப் பதிலாக, எளிமையான வழியில், எளிதான தீர்வுக்கு செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எந்த நாட்டில் நாம் வாழ்கின்றோமே, அந்த நாட்டுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். அதற்காகத் தாய் நாட்டை மறக்க வேண்டியதில்லை. மனசாட்சிக்கு விரோதமானதாய், தாய் மண்ணை நிராகரிப்பது நன்றி மறந்த செயலாகும்.

எம்மவர்களில் அநேகர் வெளிநாடு சென்றதும் தங்கள் பிள்ளைகளைத் தாய் மொழியை அறவே மறப்பவர்கள் அதிகம். அத்துடன், எமது பாரம்பரிய கலாசாரத்தையும் மறந்தே விடுவது கவலைக்குரியது.

ஆயினும், அநேக பெற்றோர் வெளிநாட்டில் இருந்தும் தாய் மொழி அறிவை வளர்ப்பதுடன் கலை, கலாசாரப் பண்புகளையும் ஊட்டிவிடுகின்றனர்.

எனினும், அடுத்த அடுத்த தலைமுறைகளில் ஒரு சாரார் தொடர்ந்தும் காரசாரமான பாரம்பரியங்கள் மொழிகளைப் பின்பற்றுவார்களா என்பது சந்தேகம்தான். எனவே, வெளிநாட்டில் வாழும் பெற்றோர்கள் அடிக்கடி தங்கள் தாய் நாட்டுக்கு வந்து, உறவுகளைச் சந்திப்பதும் ஆன்மிக விழாக்கள், பண்டிகைகளில் கலந்து கொண்டால் மிகவும் நல்லது.

உயர் கல்வியில் சிறந்து விளங்கும் எம்மவர்கள் இசை, நடனம், விளையாட்டு போன்ற துறைகளில் சிறப்பாக இருந்து, தாய்நாட்டை மேன்மைப்படுத்துகின்றனர்.

இந்நிலை தொடர்ந்தால், வெளிநாடுகளில் வாழும் எமது பிள்ளைகள் உலகுக்கே முன்னுதாரண புருஷர்களாக இருப்பார்கள். பண்டைய பெருமைகளை வளர்த்திடுக!

நன்றி–பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

## அமைச்சரவையில் முஸ்லிம்கள் இருக்கவே வேண்டுமா?



எம்.எஸ்.எம்.ஐயூப்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சரவைக்கு ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினராவது நியமிக்கப்படாமை தொடர்பாக பல்வேறு தரப்பினர் கருத்து தெரிவித்து வருகின்றனர். முஸ்லிம்கள் மத்தியிலும் பலர் அதனை விமர்சிப்பதோடு பலர் அதனை நியாயப்படுத்துகின்றனர்.

முஸ்லிம் அமைச்சர் எவரும் இல்லாத இலங்கையின் முதலாவது அமைச்சரவையாகவே தற்போதைய அமைச்சரவை இருக்கிறது. ஆனால், எவரும் முஸ்லிம்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படக் கூடாது என்று கூறுவதில்லை. நியமிக்காததில் தவறில்லை என்றே அரச தரப்பினரும் சில முஸ்லிம்களும் கூறுகின்றனர்.

முஸ்லிம்களும் பெருமளவில் வாக்களித்தே தேசிய மக்கள் சக்தி இம்முறை ஆட்சிக்கு வந்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் ஏறத்தாழ சகல தேர்தல் தொகுதிகளிலும் தேசிய மக்கள் சக்தியே கூடுதலான வாக்குகளைப் பெற்றிருந்தது. எனவே, முஸ்லிம்களும் அமைச்சரவைக்கு நியமிக்கப்பட வேண்டும் என்பது மற்றொரு வாதமாகும்.

எதிர்காலத்திலும் முஸ்லிம்களின் ஆதரவைத் தக்க வைத்துக் கொள்ளவும் அதை அதிகரித்துக் கொள்ளவும் அரசாங்கம் விரும்புவதாக இருந்தால் முஸ்லிம்களுக்கும் அமைச்சர் பதவிகளை வழங்க வேண்டும் என்றும் வாதிடப்படுகிறது.

கடந்த இரு பிரதான தேர்தல்களிலும் பொய்க் குற்றச்சாட்டுகளையும் சுமத்தி தேசிய மக்கள் சக்தியை மிக மோசமாக விமர்சித்த முஸ்லிம்களும் அந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலேயே முஸ்லிம்களுக்கு அமைச்சுப் பதவிகளை எதிர்பார்க்கின்றனர்.

அமைச்சர்களாக இருந்த முஸ்லிம்கள் கோடிக் கணக்கில் சம்பாதித்துக் கொண்டார்களே அல்லாது முஸ்லிம்களுக்கு பொதுவாக நன்மை எதுவும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது.

அரசாங்கம் முஸ்லிம்களுக்குப் பாகுபாடு காட்டாவிட்டால் அமைச்சரவையில் முஸ்லிம்கள் எதற்காக என்றும் சிலர் கேட்கிறார்கள். அத்தோடு அரசாங்கம் தற்போது எதிர்நோக்கியிருக்கும் சமூக பொருளாதார சவால்களுக்குத் தீர்வு காண்பதில் பங்களிக்கக்கூடிய திறமையும் நம்பிக்கையும் உள்ள முஸ்லிம் எவரும் ஆளும் கட்சியில் இல்லை என்றும் வாதிடப்படுகிறது.

அமைச்சரவை என்பது முஸ்லிம்களையோ வேறு எந்த ஒரு சமூகத்தையோ மதிப்பதற்காகவோ கௌரவிப்பதற்காகவோ நன்றிக் கடன் செலுத்துவதற்காகவோ அமைக்கப்படும் ஓர் அமைப்பு அல்ல.

அது அரச நிறைவேற்று அதிகாரத்துக்குச் செயல் உருவம் கொடுக்கும் ஒரு பொறி முறையாகும். அப்பொறுப்பை முறையாக நிறைவேற்றக் கூடியவர்களே அதில் அங்கம் வகிக்க வேண்டும். அவர்கள் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது முக்கியமல்ல.

ஆயினும் இது வரை பதவியிலிருந்த அரசாங்கங்கள் அமைச்சரவையை அவ்வாறானதொரு பொறிமுறையாக கருதவில்லை. இது காலவரை அது அரச தலைவர்களின் முடிவுகளுக்கு இறப்பர் முத்திரையிடும் இடமாகவே செயல்பட்டு வந்துள்ளது.

எனவே, அந்தத் தலைவர்கள் பல்வேறு சமூகங்களின் பிரதிநிதிகளுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கினர் அது ஒரு வகையில் நன்றிக் கடனாகவும் எதிர்கால அரசியல் இலாபத்துக்கான இலஞ்சமாகவும் இருந்தது. அமைச்சுப் பதவிகளைப் பெற்றவர்களின் சமூகத்தவரும் அதைக் கண்டு மகிழ்ந்தனர். அது தமது சமூகத்திற்கு வழங்கப்பட்ட அங்கீகாரமாகவும் நினைத்தனர்.

தமது சமூகத்தைச் சேர்ந்த அமைச்சர் அப்பொறுப்புக்குப் பொருத்தமானவரா? இல்லையா? என்பது அவர்களது அக்கறையாக இருக்கவில்லை.

அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் அப்பதவிகளைத் துஷ்பிரயோகம் செய்வதோ அவற்றைப் பாவித்து ஊழல்களில் ஈடுபடுவதோ தமது சமூகத்துக்கு இழைக்கும் அநீதியாகவோ அவமானமாகவோ கருதி இன உணர்வினால் உந்தப்பட்டு எவரும் கோபப்படவில்லை.

தேர்தல் காலத்தில் ஒரு கட்சியைத் திட்டித் தீர்த்து அக்கட்சி பதவிக்கு வந்தால் எவ்வித வெட்கமின்றி கட்சி தாவி அமைச்சர் பதவிகளைப் பெற்றவர்களையும் அவரது சமூகத்தவர்கள் பெரிதாக மதிக்கின்றனர். முஸ்லிம்களின் நிலையும் அவ்வாறானதாகவே இருக்கிறது.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியலை முஸ்லிம்கள் உள்ளிட்ட நாட்டில் பெரும்பாலானவர்கள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. வடக்கில் புலிகள் மற்றும் தெற்கில் மக்கள் விடுதலை முன்னணி தவிர்ந்த நாட்டில் எந்தவோர் அரசியல் கட்சிக்கும் இயக்கத்துக்கும் இது வரை பொதுவான அரசியல் இலட்சியங்கள் இருந்ததில்லை.

புலிகளுக்குத் தமிழ் ஈழம் என்ற இலட்சியம் இருந்தது. மக்கள் விடுதலை முன்னணிக்கு சோஷலிஸம் என்ற இலட்சியம் இருந்தது. அதற்காக அவ்விரு அமைப்புக்களும் கூட்டாக இயங்கி ஆயிரக் கணக்கில் உயிர்த் தியாகமும் செய்துள்ளனர்.

ஏனைய கட்சிகளின் தலைவர்களும் ஆதரவாளர்களும் தனிப்பட்ட குறிக்கோள்களை இலக்காகக் கொண்டு அரசியலில் ஈடுபடும் போது மக்கள் விடுதலை முன்னணியினர் தனிப்பட்ட நலன்களைப் புறந்தள்ளி விட்டு தமது பொதுவான இலட்சியத்துக்காக செயல்பட்டனர்.

அது தேர்தல் கால அரசியல் அல்ல. அதற்காக அவர்கள் தம்மோடு இணையும் புதியவர்களுக்கு அரசியல் அறிவை புகட்டினர். அந்த அறிவோடு குறிப்பிட்டதொரு இலக்கை நோக்கித் தேர்தல் இல்லாத காலங்களிலும் மக்களை வென்றெடுக்க பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டனர்.

மக்களை அணி திரட்டுவதற்காகப் பலர் தாம் செய்த தொழில்களையும் கைவிட்டு சம்பளமின்றி கட்சியில் முழு நேர ஊழியர்களாக இயங்கினர். பலர் பல தசாப்தங்களாக இன்னமும் இயங்குகின்றனர்.

இவர்களுள் சில ஊழல் பேர்வழிகளும், பலவீனமானவர்களும் இருந்துள்ளனர். கடந்த 59 ஆண்டுகளில் பல்வேறு காலங்களில் அவ்வாறானவர்கள் களையெடுக்கப்பட்டனர். எதிர்காலத்திலும் அவ்வாறானவர்கள் அக்கட்சியில் இருக்கலாம்.

தேசிய மக்கள் சக்தியானது மக்கள் விடுதலை முன்னணியை மையமாகக்கொண்டு பல்வேறு அமைப்புக்கள் இணைந்து அமைத்த கட்சியாகும்.

சோஷலிஸத்துக்கு பதிலாக நியாயமான ஊழலற்ற ஜனநாயக சமுதாயம் ஒன்றுக்காகவே அக்கட்சி செயற்பட்டு வருகிறது. அந்த சமூக மாற்றத்துக்காக அக்கட்சியினரும் சொந்த நலன்களை விட பொது நலனுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுகின்றனர். இம்முறை பாராளுமன்றத்துக்குத் தெரிவானவர்கள் தமது சம்பளத்தைக் கட்சி நிதியத்துக்கு அன்பளிப்புச் செய்ய முடிவு செய்துள்ளதாகக் கடந்த திங்கட்கிழமை ஊடகங்கள் தெரிவித்தன.

அவர்களுக்கு அரச அதிகாரமும் அரசாங்கமும் அமைச்சரவையும் தமது குறிக்கோளான சமூக மாற்றத்துக்கான கருவிகளாகும்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது இன, மத, சாதி போன்ற காரணிகளைப் பொருட்படுத்தாது சமூக மாற்றம் என்ற நோக்கத்தை நிறைவேற்றத் தகுதியும் தகைமையும் உள்ளவர்களை மட்டுமே அமைச்சரவையில் சேர்த்துக்கொள்வது என்ற வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

அவ்வாறாயின், அமைச்சரவையிலுள்ள சகலரும் தகுதியும் தகைமையும் உள்ளவர்களா? தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தெரிவான மற்றும் தேசிய பட்டியல் மூலம் நியமிக்கப்பட்ட எட்டு முஸ்லிம் எம்.பிக்களில் தகுதியானவர்கள் எவரும் இல்லையா? என்ற கேள்விகள் எழுகின்றன.

இங்குத் தேசிய மக்கள் சக்தி தமது உறுப்பினர்களின் கல்விசார் தகைமைகளை மட்டுமன்றி அவர்களின் நீண்டகால அரசியல் அர்ப்பணிப்பையும் கருத்தில் கொண்டுள்ளதாகவே தெரிகிறது.

அந்த அடிப்படையில் தான் மலையகத்தவரான இராமலிங்கம் சந்திரசேகரன் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டுள்ளார் போலும்.

சந்திரசேகரன், 1980 ஆம் ஆண்டளவில் இருந்து மக்கள் விடுதலை முன்னணியில் முழுநேர தொண்டராக செயற்படுபவராவார். அமைச்சரவையின் நோக்கத்தைப் பார்க்கும் போது, அந்த நியமனம் சரியா என்ற கேள்வியும் எழுகிறது. காலம் தான் அதற்குப் பதில் கூற வேண்டும்.

ஆயினும் கொள்கை வகுக்கும் பிரதான தளமான அமைச்சரவையில் நாட்டில் வாழும் சகல சமூகங்களினதும் சமூகக் குழுகளினதும் அபிலாஷைகளும் எண்ணங்களும் எவ்வகையிலாவது பிரதிபலிக்க வேண்டும என்பது மறுக்க முடியாத விடயமாகும். அதற்காக சகல சமூகங்களினதும் சமூகக் குழுகளினதும் பிரதிநிதிகளை அமைச்சர்களாக நியமிக்க முடியாது. ஆயினும் பிரதான சமூகங்களின் பிரதிநிதிகளை நியமிக்க முயல்வது நியாயமானதாகும்.

அமைச்சரவை போன்ற கொள்கை வகுக்கும் பொறிமுறை ஒன்றில் ஒரு சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் மற்றொரு சமூகத்தை முறையாக பிரதிநிதித்துவப்படுத்த முடியாதா? முடியும் என்று அமைச்சர் விஜித்த ஹேரத் கடந்த வார இறுதியில் அக்குறணையில் முஸ்லிம்கள் மத்தியில் உரையாற்றும் போது கூறினார்.

ஆயினும் அதற்கான தேவையும் நேர்மையும் பக்குவமும் உள்ளவர்கள் எவ்வளவு தான் இருந்தாலும் அவர்களால் முற்று முழுதாக அவ்வாறு செய்ய முடியாது என்று தெரிகிறது.

உதாரணமாக, முஸ்லிம் பெண்களின் அபாயா தீவிரவாதத்தின் வெளிப்பாடு என்று முஸ்லிம் விரோத பிரசாரம் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டு ம.வி.மு தலைவர் ஒருவர் கூறினார். அப்புரிதல் பிழை என்பதை இம்முறை அபாயா அணிந்து சென்று தே.ம.சவிக்கி வாக்களித்த ஆயிரக் கணக்கான முஸ்லிம் பெண்கள் நிரூபித்துள்ளனர்.

சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள் அவர்களது நாட்டின் சமூக பொருளாதார அரசியல் தீர்மானங்களின் போது பங்களிப்புச் செய்வது அவர்களது அடிப்படை உரிமையாகும் என்று ஐ.நா. மனித உரிமை பேரவை கூறுகிறது.

உள்வாங்கல் (inclusivity), இனச் சமநிலை (ethnic balance), பாலின சமநிலை (gender balance) போன்ற எண்ணக்கருக்கள் அடிப்படையில் முன்வைக்கப்படுகிறது. எனினும் இது வித்தியாசமான அரசாங்கம் என்பதால் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## கடிதங்கள்

### பாழாய் போகின்றன


நாவலப்பிட்டி புகையிரத நிலையத்திற்குச் சொந்தமான பல குடியிருப்புகள் எவ்வித தேவைக்கும் பயன்படுத்தப்படுவதில்லை என அப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

1876இல் நாவலப்பிட்டி புகையிரத நிலையத்தை நிர்மாணித்த போது, அதன் ஊழியர்களுக்காக 450 பங்களாக்களும் 350 குடியிருப்புகள் கட்டப்பட்டதோடு, அது நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் இருந்ததால், கட்டிடங்கள் பழுதடைந்து இடிந்து விழும் அபாயத்தில் இருந்தன. அந்த உத்தியோகபூர்வ இல்லங்களில் பலவற்றின் சட்டவிரோத நடவடிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன.

நாவலப்பிட்டியில் சுமார் 80 சதவீதமான காணி புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமானது என்றும் காணி பயன்படுத்தப்படாமையால் வெளியாட்களால் சுவீகரிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் நாவலப்பிட்டி புகையிரத நிலைய அதிகாரி ஒருவரிடம் வினவிய போது, குறித்த குடியிருப்புகள் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாகப் புகையிரத கட்டிடங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் பரிந்துரைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

உரிய நிலையில் உள்ள கட்டிடங்கள் பழுது நீக்கப்பட்டு, பணியாளர்களுக்குக் குடியிருப்புகளாகப் பயன்படுத்தப்படும் என அதிகாரி தெரிவித்தார்.



# இலங்கையும் யானைகளும்



எஸ்.சுஜேந்திரம்,
யாழ்.பல்கலைக்கழகம்.



பல்வேறு உயிரினங்களைக் கொண்ட இலங்கையானது அழகான கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகக் காணப்படுகின்றது. இத்தகைய நாட்டில் உயிர் பல்வகைமை என்ற பண்பை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது, இலங்கையானது பலதரப்பட்ட உயிரினங்களுக்கும் மனிதர்களுக்கும் ஏற்றதான ஒரு நாடாக அமைந்திருக்கிறது. இவ்வாறாக ஏனைய நாடுகளில் இருந்தும் பல வகையான பறவைகள் இலங்கையை நோக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஒரு நிலைப்பாட்டில், இலங்கையை நோக்கும் போது, இலங்கையானது பெருமளவில் யானைகளைக் கொண்ட ஒரு நாடாகவும் காணப்படுகின்றது.

இலங்கை வனவள திணைக்களத்தின் கருத்துக் கணிப்பின்படி, இலங்கையில் 2023ஆம் ஆண்டில் சுமார் 7,000 யானைகள் காணப்படுகின்றதாக கூறப்படுகின்றது.

யானை-மனித மோதலானது இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் பரவியுள்ளது. அண்மை காலங்களில் இடம்பெற்ற பாரிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் விவசாய

நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட பாரிய காடு அழிப்புகள் மற்றும் யானைகளின் உணவின் முக்கிய அங்கமாக விளங்கும் குளங்களை அண்டிய புல்வெளிகளின் அழிவு, யானைகள் நீண்ட காலமாக பயன்படுத்தி வருகின் இடம்பெயர்வு பாதைகள் தடைபடல் மற்றும் மேலும் பல நேரடி மற்றும் மறைமுக காரணங்களால் யானை - மனித மோதலானது மிகவும் உக்கிரமடைந்துள்ளது.

அத்துடன, யானைகள் வசித்து காடுகள் வெட்டப்பட்டு மனிதர்களுக்கு ஏற்ற நிலங்களாக அதாவது, விவசாயம் மற்றும் குடியிருப்புகள் போன்றவற்றிற்காக மாற்றப்படுகின்றன.

இதனால் யானைகள் தங்களுடைய குடியிருப்புகளையும் உணவு தேடல்களையும் இழந்து வருகின்றன என குறிப்பிட முடியும்.

இலங்கையில் வடமத்திய, வடமேற்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களை பொறுத்தவரையில், யானைகள் குடியிருப்புகளுக்கு புகும் செயல் மிகவும் தீவிரமாக காணப்படுகிறது.

மேலும் இந்த யானை, மனித மோதல்கள் காரணமாக ஆட்கள் உயிரிழப்பது மட்டுமின்றி, யானைகள் இறப்பதும், மக்களின் பயிர்கள், விளை நிலங்கள், வயல் வெளிகளை நாசமாக்குவதுடன் வீடுகள், சொத்துக்களையும் அழிக்கின்றன

2010 முதல் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2,600க்கும் மேற்பட்ட யானைகள் மனித, யானை மோதல்களில் இருந்து உள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

யானைகள் வனப் பகுதிகளில் நிரந்தரமாக தங்க வைக்கப்பட வேண்டும் என்பதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், யானைகள் தங்களுடைய உணவு தேவைகளின் காரணமாக மனித குடியிருப்புகளை நோக்கி இன்னும் நகர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் அறிக்கையின் படி, 2023ஆம் ஆண்டு உயிரிழந்த யானைகளின் எண்ணிக்கை 238 ஆக இருப்பதுடன், உயிரிழந்த மனிதர்களின் எண்ணிக்கை 94 ஆக காணப்படுகிறது. குறிப்பாக இனங்காணப்படாத காரணிகள், துப்பாக்கிச்சூடு, மின்சார தாக்குதல் போன்றவற்றால் அதிகளவான யானைகள் கொல்லப்படுகின்றன அது மட்டுமல்லாது, மேலதிக செயல்பாடுகளும் இதற்கு காரணமாக இருக்கிறது.

## பொருளாதார தாக்கங்கள்

குறிப்பாக யானைகள் மக்களுடைய பயிர்ச்செய்கை நிலங்களில் புகுவதால் அவர்கள் தங்களுடைய பொருளாதாரத்தையும் தங்களுடைய அடிப்படை வாழ்க்கையையும் இழக்கின்றனர். இதனால் மக்களுடைய பாதுகாப்பு, பொருளாதாரம் என்பன இல்லாமல் அன்றாட செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைகின்றன.

## பிரச்சினைக்கு தீர்வு என்ன?

யானை, மனித மோதலை முகாமைத்துவம் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள யானை வேலி மூலம் மாத்திரம இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதனை இனங் கண்டு, அதற்காக வெற்றிகரமான மற்றும் நிரந்தர அனைத்து வழிகளையும் உள்ளடக்கிய வேலைத்திட்டம் ஒன்றினை தயாரிப்பதன் மூலம் இந்த யானைகள் மக்கள் குடியிருப்புக்களுக்கு வருவதை தடுக்க முடியும்.

அத்துடன், யானை, மனித மோதல் தீவிரமாக உள்ள பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திப் பணிக்கு அந்நிறுவனங்களை ஆர்வப்படுத்தல் மற்றும் அவர்களது பங்களிப்பினை கட்டாயப்படுத்துதல் என்பன ஊடாக பிரச்சினைகளுக்கு நிரந்தமான தீர்வான வேலைத்திட்டம் ஒன்றினை மேற்கொள்ள முடியும். உதாரணமாக, இரவு நேரங்களில் மின் விளக்குகள் இல்லாத, யானைகள் அதிகம் நடமாடுகின்ற பிரதேசங்களில் மின் விளக்குகளை நிறுவுவதற்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக்கொள்ளல், பாரியளவிலான ஹோட்டல் போன்ற கருத்திட்டங்களுக்கு அனுமதியளிக்கும் போது, அதிலிருந்து வெட்டப்படுகின்ற மரங்கள் அல்லது பயன்படுத்தும் நிலப் பிரதேசத்திற்கு ஏற்றவாறு இந்த விலங்குகளின் உணவுப் பழக்கத்திற்கு நேரடியாக துணை புரிகின்ற புல் வளர்ப்புத் தரைகளை அல்லது வன செய்கைகளை மீள் நிறுவ வேண்டிய இடம் ஒன்றில்

மேற்கொள்வதற்கும் வனப் பங்களிப்பினை பெற்றுக் கொள்வதை கட்டாயப்படுத்தல்

மேலும், பாரியளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிதித் திட்டமிடலினுள் யானை, மனித மோதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக நிதி ஏற்பாடுகள் செய்யப்படாமையினால் அரசாங்க நிதி அதற்காக பாரியளவில் செலவிடப்படுகின்றமை அறியக் கூடியதாக உள்ளது. எனவே, அவ்வாறான நிதி ஏற்பாடுகள் அக்கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக ஒதுக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது.

# யாழ்ப்பாண மினி பஸ்



சௌந்தராஜன் துர்ஷாயினி,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

**தமிழர் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் என்றால் முதலில் நினைவுக்கு வருவது பழமையின் பெருமையை பறைசாற்றுகின்ற தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசம் என்பதேயாகும்.**

அடுத்ததாக எமது நினைவுக்கு வருவதுதான் இந்த மினி பஸ் என்கின்ற தனியார் வாகனம். இலங்கையில் 1970 தொடக்கம் 1977 வரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த மூடப்பட்ட பொருளாதாரம் 1977க்கு பின்னர் போக்குவரத்துத்துறை தனியாருக்குத் திறந்து விடப்பட்ட போது, மினி பஸ் யுகத்தின் வருகை ஆரம்பமானது. அந்தக் காலம் தொட்டு இந்த நவீன காலம் வரை மினி பஸ்ஸின் தாக்கம் யாழ்ப்பாணத்தில் மட்டும் குறையாமலும், சலிக்காமலும் காணப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் பணக்கார வர்க்கத்தினரும், நடுத்தர வர்க்கத்தினருமே இந்த மினி பஸ்ஸின் முதலாளி வர்க்கமாகத் திகழ்கிறார்கள். அன்றைய காலப்பகுதியிலும் சரி இன்றைய காலத்திலும் சரி இலங்கையின் வடபகுதி மாவட்டங்களிலும் குறிப்பாக 'நம்ம ஊரு யாழ்ப்பாணத்திலும்தான்' அதிகளவான மினி பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இதன் வருகை தட்டி வேனின் செல்வாக்கை மங்கச் செய்து தன்னுடைய இராச்சியத்தை நிலை நாட்டியது.

இந்த ஆய்வுக் கட்டுரையை எழுதிய நான், திருகோணமலையில் பிறந்து வளர்ந்ததால் என்னவோ மினி பஸ் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்றுதான் கூற வேண்டும். ஏனென்றால், அங்கு மினி பஸ்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு கைவிட்டு எண்ணக்கூடிய அளவே காணப்படும். நான் யாழ்ப்பாணத்திற்கு வந்த பிறகுதான் தெரியும் மினி பஸ்ஸோடு; தான் எனது மிச்ச வாழ்க்கையைக் கழிக்க வேண்டும் என்று ஆம்! ஏனென்றால், யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு கிராமங்களுக்கும் பிரதேசங்களுக்கும் மக்கள் தமது அன்றாட வேலைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்ய மினி பஸ்ஸை பயன்படுத்துகிறார்கள்.

உதாரணமாக அச்சுவேலி, கொக்குவில், திருநெல்வேலி, நெல்லியடி, புன்னாலை, வல்வெட்டித்துறை,பருத்தித்துறை என பல தூரப் பிரதேசங்களுக்கு இதனுடைய ஓட்டம் சலிக்காமல் இன்றும் அசுர வேகத்தில் ஓடிக்கொண்டிருப்பதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

இதில் என்னவொரு ஆச்சரியம் என்றால் மினி பஸ்ஸில் ஏறியவுடன் கைவிலங்கு போடப்பட்டுவிடும். அதற்காக உடனே எங்களைக் கொலைக் குற்றம் செய்த குற்றவாளி என்று நீங்கள் எண்ண வேண்டாம். யாழ்ப்பாண மினி பஸ்ஸில் அமர்வது என்பது ஒரு சிம்மசொற்பனம் என்றே நான் நினைக்கின்றேன். ஏனெனில் மினி பஸ்ஸை புடைத்துக் கொண்டு வெளியே தள்ளும் அளவிற்கு அவ்வளவு சன நெரிசல் காணப்படும். அதனால்தான் பஸ்ஸில் ஏறியவுடன் அங்கும் இங்கும் தள்ளாடி விழாமல் இருப்பதற்காக பஸ்ஸின் மேற்கம்பியை இறுகப்பற்ற வேண்டும். இதனையே நான் கைவிலங்கு போடப்படும் என்று நகையாடினேன். யாழ்ப்பாணத்தில் உள்ள மினி பஸ்களுக்கென்று தனித்துவமான பெயர்களும் காணப்படுகின்றது.. உதாரணமாக யாழ்தேவி, நல்லூரான்,செல்வச்சந்நிதி போன்ற பெயர்களில் இந்த மினி பஸ்கள் ஓடுகின்றது. இவ்வாறான பெயர்கள் பெரும்பாலும் மினி பஸ் உரிமையாளரின் இஷ்ட தெய்வத்தின் பெயராகவும் காணப்படுகின்றது.

மேலும் பயணச்சீட்டு வழங்குபவரின் நிலைதான் பரிதாபத்திற்குரியது. ஏனெனில், மினி பஸ்ஸின் வாசலில் தோரணம் போல் தொங்கிக் கொண்டே வருவார். ஆனால், அவர் காரியத்தில் கண்தான் அதாவது நாம் விடும் மூச்சு கூட அடுத்தவர் முதுகின் மீது பட்டு நம்மிடமே திரும்பி வரும் அளவுக்கு சன நெரிசல் இருந்தாலும் ஒவ்வொரு பஸ் தரிப்பிடத்திலும் நின்று பயணிகளை மேலும் ஏற்றி "அம்மா கொஞ்சம் உள்ள போங்க, தம்பி கொஞ்சம் சரிந்து நில்லுங்க, வழிவிட்டு நில்லுங்க, இன்னும் கொஞ்சம் உள்ள போகலாம்" என்று தன்னுடைய குரல் மூலம் மினி பஸ்ஸை ஒழுங்கமைத்து பயணிகளைத் தனது பஸ்ஸில் ஏற்றிச் செல்லும் திறன் உடையவர். மேலும் சன நெரிசலிலும் கூட

"டிக்கெட்... டிக்கெட்... காச எடுத்து கையில வைச்சுக்கொள்ளுங்க" என கூவி பயணச் சீட்டை வழங்குவார். மறுபுறம் பஸ் ஒட்டுநர் வெற்றிலையை நான்காக மடித்து வாய்க்குள் போட ஆரம்பிப்பார்.

மினி பஸ்ஸில் எவ்வளவுதான் சன நெரிசலும், வியர்வை மணமும் மற்றும் காலை மிதித்து விட்டு பின்பு 'Sorry' சொல்கின்ற பண்பும் அன்றாடம் இடம்பெற்றாலும், இதன் நடுவே யாழ்ப்பாணத்தின் இளம் காதல் ஜோடிகளின் காதல் வாழ்க்கையும் இந்த மினி பஸ்ஸில்தான் அரங்கேற்றம் செய்யப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் போன்றோர் வீட்டுக்கும் பெற்றோருக்கும் தெரியாமல் சந்திப்புகள், அன்பளிப்புகளைப் பரிமாறல்,சின்ன சின்ன நவநாகரிக காதல் சேட்டைகளை இந்த மினி பஸ்ஸில் நடாத்துவார்கள். இதற்கு ஒருவித காரணமாக இருப்பது சினிமாப் பாடல்கள். ஆம்! மினி பஸ்ஸில் பழைய பாடல் தொடக்கம் புதிய பாடல்கள் வரை குறிப்பாகக் காதல் பாடல்கள் ஒலித்துக் கொண்டே பஸ் வண்டி ஓடிக்கொண்டிருக்கும். நான் அதிகமாக பஸ்ஸில் கேட்டது "உன் பேரை சொல்லும் போதே..." என்ற பாடலாகும். அத்துடன், மினி பஸ்ஸில் காதல் வயப்பட்டு பின்பு அக்காதல் கல்யாணத்திலும் முடிவடைந்த சம்பவத்தை வரலாறுகள் கூறுகின்றன.

மினி பஸ்களை பெரும்பாலும் மக்கள் உள்நாட்டுச் சுற்றுலாவிற்கும் பயன்படுத்துகின்றனர். சுற்றுலா வலயங்களான கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற தூர இடங்களை மக்கள் பார்வையிடுவதற்காகவும் பயன்படுத்துகின்றனர். பஸ்களை விட மினி பஸ் செலவு குறைந்ததாகவும், நீண்ட தூரம் பயணம் செய்யக்கூடிய அனைத்து வசதிகளையும் உடையதாகவும் காணப்படுகின்றது. குறிப்பாக மினி பஸ்ஸில் குறைந்தது 20 பேர் அமர்ந்து எந்தவொரு இடைஞ்சலும் இன்றி, வசதியாகப் பயணம் செய்யலாம். ஆனால், எமது யாழ்ப்பாணத்தில் இதற்கு எதிர்மாறாகவே நடக்கின்றது. முதலாவதாக ஏறும் நபர் பஸ்ஸின் பின்புற ஆசனத்தில் அமர்ந்து கொண்டால் அவர் இறங்க வேண்டிய இடம் வந்தாலும், அவரால் இறங்கிக் கொள்ள முடியாமல் இருக்கும் அவ்வளவு சன நெரிசல் காணப்படும். நான் பார்த்த அளவில் யாழ்ப்பாணத்து மினி பஸ்ஸில் சுமார் 50 பேருக்கு அதிகமாகவே ஏற்றிச் செல்வர். டிக்கெட் தருபவர் கதவில் சாகசம் காட்டியபடி நிற்பார், "இந்தா... அந்தா.. என்று கீழே விழுவது போல்" மினி பஸ்ஸிற்கு வெளியே நின்று கொண்டு வருவார். மினி பஸ்ஸின் போக்குவரத்து சேவையானது யாழ்ப்பாணத்து மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக அமைகின்றது. எனினும், பொதுமக்களினதும் வாகனத்தினதும் பாதுகாப்பு கருதி மினி பஸ்னுடைய வேகத்தைக் குறைத்தும்,

குறிப்பிட்ட தொகைக்கு மேல் பயணிகளை ஏற்றாமலிருந்தாலும் இதனுடைய சேவையானது அளப்பரியதாகக் காணப்படும். மினி பஸ்கள் வெறுமனே பொதுமக்களை மட்டும் ஏற்றிச் செல்லும் தன்மை கொண்டிராது சொந்தபந்தங்களை ஒன்றிணைக்கின்ற ஒரு தளமாகவும் காணப்படுகின்றது. குறிப்பாக நல்லூர் திருவிழா காலங்களில் கோவிலுக்குச் சொந்த பந்தங்களை ஏற்றிச் செல்கின்ற குடும்ப வாகனமாகவும், திருமண வைபவங்களுக்கும் உறவினரின் அமங்கலமான நிகழ்வுகளுக்கும் அழைத்துக் கொண்டு சேர்க்கின்ற வாகனமாகவும் யாழ்ப்பாணத்தில் இந்த மினி பஸ் தொழிற்படுகின்றது. எனினும் 2009 ஆம் ஆண்டு யுத்த காலத்திற்கு முன்பு இருந்த நன்னிலையானது தற்காலத்தில் சரிவடைந்து செல்வதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

ஏனெனில், யுத்த காலத்திற்கு முன்பு வடமாகாணம் முழுவதும் மினி பஸ்களின் ஓட்டமும் முன்னேற்றமும் அதிகமாக இருந்தது. ஆனால், தற்போது யாழ்ப்பாணத்தில்தான் அதிகப்படியாக உள்ளூர் பிரதேசங்களுக்குப் பயணம் செய்வதற்காக மட்டுமே மினி பஸ்கள் பாவனைக்கு உள்ளது. பஸ்களே அதிகப்படியாக வெளி மாவட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்று கூறுவதே தற்காலப் போக்காகும். இருப்பினும், யாழ்ப்பாணத்தின் பழைமைப் பேணும் மரபானது மாறாது என்பதற்கிணங்க இன்றும் கூட மினி பஸ்கள் தங்களது சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக இரவு பகல் பாராது, கண் துஞ்சாது அர்ப்பணிப்புடன் தமது சேவையை வழங்கிக் கொண்டு வருகிறார்கள். நாள்தோறும் கிழக்கில் சூரியன் உதிப்பது போல மினி பஸ்

வண்டிகளும் யாழ் மண்ணின் வீதிகளில் பயணிகளை ஏற்றிக்கொண்டு தனது நாற்புற சில்லுகளில் ஒரு பக்கம் மாத்திரம் சரிந்து கொண்டு இரண்டு சில்லுகளில் அசுர வேகத்தில் ஓடிக்கொண்டிருப்பதை எம்மால் நாள்தோறும் காணக்கூடிய திருக்காட்சியாக மினி பஸ்களின் பயணம் காணப்படுகின்றது.




# வெள்ளக்காடாக காட்சி...

நாட்டின் பல பாகங்களிலும் கடந்த சில நாட்களாக பெய்த அடைமழையால், ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில், தாழ்நிலங்கள் பல, வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன.

(படங்கள்: தமிழ்மிரர் நிருபர்கள்)

அம்பாறையில்...



காரைதீவில்...





மன்னாரில்...



மூதூரில்...



நுவரெலியாவில்...






அம்பாறை மஹாஓயா பொலன்னறுவை பிரதான வீதியின் அரலகங்வில போலிச் சந்தி பகுதியில் செவ்வாய்க்கிழமை (26) காலை பாலமொன்று உடைந்துள்ளது என பொலன்னறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலுவலகம் தெரிவித்துள்ளது.

தம்பலகாமத்தில்...





# அமைச்சரவை முடிவுகள் சில

**ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில், 2024.11.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகளில் சில...**

## குறைநிரப்பு மதிப்பீடொன்றைச் சமர்ப்பித்தல்

2024ஆம் ஆண்டின் தொடர்ந்து வரும் காலத்தில் ஒருசில அத்தியாவசிய செலவுகளை மேற்கொள்ளல் மற்றும் கணக்கீடு செய்வதற்குத் தேவையான நிதியொதுக்கீடுகள் குறை நிரப்பு மதிப்பீட்டின் (Supplementary Estimates) மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அடையாளங் காணப்பட்டுள்ள ஒருசில செலவுகளை 2024ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட செலவின மதிப்பீட்டுக்கு உட்பட்ட வகையில் நிதியொதுக்கீட்டை ஏற்பாடு செய்வதற்கு இயலுமை காணப்படுவதுடன், 2024ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த செலவு எல்லையை விஞ்சாத வகையிலும் மற்றும் அரசு கடன்பெறும் உயர்ந்தபட்ச எல்லைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் குறித்த இணக்கங்களை மேற்கொள்வதற்கான இயலுமை உள்ளது. அதற்கமைய, கீழ்க்காணும் பணிகளுக்காக 219,373 மில்லியன் ரூபாய்களான குறை நிரப்பு மதிப்பீட்டுப் பிரேரணையை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(i) இலங்கை அரச ஐந்தொகைக்கு மாற்றப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன் மீள் கட்டமைப்பு காரணமாக வங்கிகளுக்கு வழங்கப்படவுள்ள வட்டிச் சலுகைக் கொடுப்பனவுகளுக்காக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு 130,000 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

(II) டொலருக்கு எதிராக ரூபாய் பலம் பொருந்தியதாக மாறியமையால் திறைசேரி பிரதிச் செயலாளரின் பெயரிலுள்ள டொலர் கணக்குகளில் காணப்படுகின்ற மீதியின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள வெளிநாட்டுச் செலாவணி நட்டத்தைக் கணக்கு வைப்பதற்காக 18,000 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

(III) சிரேட்ட பிரஜைகளுக்கான விசேட வட்டி வீதம் வழங்கப்பட்டமையால் வங்கிகள் செலுத்தியுள்ள மேலதிக வட்டியை ஈடுசெய்து கொள்வதற்காக அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு 32,641 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

(IV) சீன அரசின் நன்கொடையாக வழங்கப்பட்ட பாடசாலைச் சீருடைத் துணியின் பெறுமதியைக் கணக்கு வைப்பதற்காகக் கல்வி அமைச்சுக்கு 9,829 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

(V) ஐக்கிய அமெரிக்காவின் நன்கொடையாக இலங்கை விமானப் படைக்குக் கிடைக்கப் பெற்றுள்ள 02 விமானங்களின் பெறுமதியைக் கணக்கு வைப்பதற்காகவும், வரி செலுத்துவதற்காகவும் இலங்கை விமானப்படைக்கு 8,331 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

(VI) அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவை செலுத்துவதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு 1,400 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

(VII) கடன் மீள் கட்டமைப்புச் செயல்முறைக்குரிய நிதி சட்ட ஆலோசகர்களுக்கு மத்திய வங்கியால் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை ஈடு செய்வதற்காக நிதி அமைச்சுக்கு 3,213 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்வதற்காக சீன அரசால் நன்கொடையாக வழங்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சிறியளவிலான மீனவர்களுக்கான சலுகைகளை வழங்குவதற்காகக் கிடைக்கப்பெற்றுள்ள உதவிகளைக் கணக்கு வைப்பதற்காகக் கடற்றொழில் அமைச்சுக்கு மேலதிக ஒதுக்கீடு செய்வதற்காகத் தேசிய வரவு-செலவுத் திணைக்களத்திற்கு 1,533 ஒதுக்கீடு செய்தல்.

(VIII) ஜப்பான் அரசின் நன்கொடையாக சுகாதாரத் துறையின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்குக் கிடைக்கப்பெற்றுள்ள எரிபொருள் தொகையின் பெறுமதியைக் கணக்கு வைத்தல் மற்றும் 5225.5 மில்லியன் ரூபாய் சுங்க வரியினை செலுத்தச் சுகாதார அமைச்சுக்கு மேலதிக ஒதுக்கீடாக வழங்கத் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு 10,826 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்தல்.

(X) பாடசாலை போசாக்கு வேலைத்திட்டத்திற்காக ஒரு மாணவனுக்காக நாளொன்றுக்கு செலவாகும் 85/- ரூபாவை 110/- ரூபாவாக அதிகரிப்பதற்குக் கல்வி அமைச்சுக்கு மேலதிக நிதி ஒதுக்கீட்டுக்குத் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு 1,800 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

(XI) இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட சொத்துக்களைப் புனரமைப்புச் செய்வதற்கான நட்டஈடு செலுத்துவதற்காகப் பாதுகாப்பு அமைச்சுக்கு மேலதிக நிதியொதுக்கீட்டுக்கு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு 400 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்தல்.

(XII) சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அதிகரித்துள்ளமை மற்றும் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் உணவுப் பானங்களுக்கான செலவு அதிகரித்துள்ளமையால் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குத் தேவையான மேலதிக நிதியொதுக்கீட்டுக்கு தேசிய வரவு-செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு 1,400 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்தல்.

## ஒப்பந்தத்தை வழங்குதல்

2024.12.15ஆம் திகதி தொடக்கம் 2025.06.14 வரையான காலப்பகுதியில் டீசல் (0.05% M.S) 04 கப்பல் தொகையைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விநியோகத்தர்களிடம் விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, 06 விலை மனுதாரர்கள் விலை மனுக்களைச் சமர்ப்பித்துள்ளனர். குறித்த விலை மனுதாரர்களை மதிப்பீடு செய்த பின்னர் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைக்கமைய குறித்த பெறுகையை சிங்கப்பூரின் பீபீ எனர்ஜி (ஏசியா) பிறைவெட் லிமிட்டட் இற்கு வழங்குவதற்கு வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மத்தியகால அரச நிதிநிலை அறிக்கை 2024

2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 52ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தலுக்கு முன்னரான வரவு-செலவுத் திட்ட நிலை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன், பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பொதுத் தேர்தலை நடாத்துவதற்குத் தேவைப்படுகின்ற பிரகடனம் அல்லது கட்டளையின் வெளியீட்டிலிருந்து மூன்று கிழமைகளினுள் நாட்டின் நிதிநிலை மீதான தகவல்களை உள்ளடக்கிய தேர்தலுக்கு முன்னரான வரவு-செலவுத் திட்ட நிலை அறிக்கையை திறைசேரி செயலாளர் அவர்கள் பொதுமக்களுக்கு வெளியிடல் வேண்டும். குறித்த அறிக்கை 2024.10.14ஆம் திகதி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 50ஆம் பிரிவின் பிரகாரம் அரசின் நிதிச் செயல் நுணுக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி மூலோபாயத்தினை ஒப்பிட்டு அரசாங்கத்தின் மத்திய ஆண்டு நிறைவேற்றுகையை மதிப்பீடு செய்வதற்குப் பொதுமக்களுக்கு அடிப்படையொன்றை வழங்குவதற்காக மத்தியகால நிதிநிலை அறிக்கை குறித்த ஆண்டின் ஒக்டோபர் மாதத்தின் இறுதித் தினத்தில் அல்லது குறித்த ஆண்டின் நிதியொதுக்கீட்டுச் சட்டத்தை நிறைவேற்றி 10 மாத காலம் கடந்த பின்னர் அல்லது இவ்விரண்டு தினங்களின் பின்னர் தொடர்ந்து வரும் தினத்தில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பொதுமக்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

குறித்த அறிக்கையானது 2024.10.31ஆம் திகதி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தேர்தலுக்கு முன்னரான வரவு-செலவுத் திட்ட நிலை அறிக்கை-2024 மற்றும் ஆண்டுக்கான மத்தியகால அரச நிதிநிலை அறிக்கை-2024 பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 2025ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தயாரித்தல்

பொதுமக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுகின்ற வகையில், அபிவிருத்தியின் ஆரம்பப் படிமுறைகளை மேற்கொள்வதற்கான வரவு-செலவுத் திட்டமாக 2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்குப் புதிய அரசு எதிர்பார்க்கின்றது.

அதற்கிணங்க, 2024இன் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள செலவின மட்டுப்பாடுகளுக்கிணங்க, அரச கொள்கை வரைபுக்கமைய, அமைச்சின் விடயதானங்களின் கீழ், அந்தந்த அமைச்சுக்களால் அடையாளங் காணப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியொதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு இயலுமாகும் வகையில், அனைத்து அமைச்சுக்களிலிருந்தும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும், 2025ற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2025.01.09 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இரண்டாம் வாசிப்பு (வரவு-செலவுத் திட்ட விவாதம்) 2025.02.17 அன்று நடத்துவதற்கும், மூன்றாம் வாசிப்புக்கான வரவு-செலவுத் திட்ட விவாதத்தை 2025.02.27 அன்று தொடக்கம் 2025.03.21 அன்று வரை நடத்துவதற்கு இயலுமாகும் வகையில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## அரச நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்று-2024

2024இன் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 53(1)ஆம் பிரிவின் பிரகாரம், குறைந்தபட்சம் காலாண்டு அடிப்படையில், நிதி விடயதான அமைச்சர் அவர்கள் அரச அரசிறை மற்றும் செலவினங்கள் உள்ளடக்கிய நிதிச் செயலாற்றுகை அறிக்கையை ஒவ்வொரு காலாண்டின முடிவிலும் 45 நாட்களுக்குப் பிந்தாமல் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து, அமைச்சரவையைத் தெளிவூட்டிய பின்னர், நிதி விடயதான அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படல் வேண்டும். அதற்கமைய, 2024.09.30ஆம் திகதியில் முடிவடையும் மூன்றாம் காலாண்டுக்கான அனைத்து விசேட செலவின அலகுகள், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்கள் மூலமாக அறிக்கையிடப்பட்ட திரட்டு அரசிறை வருமானங்கள் மற்றும் செலவினங்கள் உள்ளடக்கிய நிதிச் செயலாற்றுகை அறிக்கை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடுவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மீள்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தல்

2024 ஜூன் மாதத்தில் இலங்கை அரசால் பிரதான இருபுடை கடன் வழங்குநர்களின் உத்தியோகபூர்வ கடன் வழங்கல் குழு (OCC) உறுப்பினர்களுடன் கடன் மீள் கட்டமைப்புத் தொடர்பான இறுதி உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

2024 செப்டெம்பர் மாதத்தில் கொள்கை ரீதியாக 14.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பிணை முறிகளை மீள் கட்டமைத்தல் தொடர்பாக சர்வதேச முதலீட்டாளர்களின் முகவர் குழுவான பிணைமுறிதாரர்கள் (Aduoc Bond uolders) சமகாலக் குழு மற்றும் இலங்கையின் உள்நாட்டு பிணைமுறிதாரர்களின் கூட்டு (Local Consortium of Srilanka) உடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர், நாட்டுக்கான சர்வதேச பிணைமுறிதாரர்களுடன் அடிப்படை உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, இலங்கையின் சர்வதேச பிணை முறிக் கடன் கட்டமைப்பு, முதலீட்டாளர்கள் மற்றும் செலுத்தல் தொடர்பான விடயங்களைக் கருத்தில் கொண்டு, இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் தொடர்பாக இலங்கை அரசின் நிதி மற்றும் சட்ட ஆலோசகர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள பகுப்பாய்வின் பின்னர், மற்றும் இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நீடித்த கடன் வசதிகளின் கீழான ஏற்பாடுகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வரைகூறுகளுக்கு (Parameters) அமைய, தற்போது நிலவுகின்ற பிணை முறிகளுக்கான புதிய பிணை முறிப் பரிமாற்றங்கள் செய்வதற்கான வழிவகைகளை இலங்கையின் சர்வதேச பிணை முறி மிள்கட்டமைப்புக்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாகிஸ்தான்

இம்ரான் கானை விடுவிக்க கோரி பேரணி:

# வெடித்தது கலவரம்

பொலிஸார் – போராட்டக்காரர்கள் மோதல் | பொலிஸ் அதிகாரி இராணுவ வீரர்கள் பலி; 119 பேர் காயம் | 4,000 பேர் கைது | 22 பொலிஸ் வாகனங்கள் தீக்கிரை

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் (வயது 72) விடுதலை செய்யுமாறு, இம்ரான் கானின் ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக, தலைநகர் இஸ்லாமாபாத் நோக்கி பேரணி நடத்த இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தலைநகர் செல்லும் அனைத்து வீதிகளும் மூடப்பட்டன. மேலும், பாதுகாப்பு கருதி இராணுவ வீரர்கள், பொலிஸார் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டன. அதேபோல், பஞ்சாப் மாகாணத்தில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அலைபேசி மற்றும் இணையச் சேவைகளும் துண்டிக்கப்பட்டன.

ஆனால், இதனைப் பொருட்படுத்தாமல் இம்ரான்கான் ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கானோர், செவ்வாய்க்கிழமை (26), காலை இஸ்லாமாபாத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர்.




பஞ்சாப் மாகாணத்தில் நுழைந்தபோது பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இதன்போது அங்குப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் தடியடி மற்றும் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசி போராட்டக்காரர்களைக் கலைத்தனர்.

இந்த போராட்டத்தில், போராட்டக்காரர்களால் பொலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதிரடிப் படையைச் சேர்ந்த 4 இராணுவ வீரர்கள் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர். குறைந்தது 119 பேர் காயமடைந்தனர் மற்றும் இஸ்லாமாபாத்திற்கு வெளியேயும் பஞ்சாப் மாகாணத்தின் பிற இடங்களிலும் நடந்த மோதல்களில் 22 பொலிஸ் வாகனங்கள் எரிக்கப்பட்டன என்று, மாகாண பொலிஸ் தலைவர் உஸ்மான் அன்வர் கூறினார்.


மேலும், போராட்டத்தில் கலந்துகொண்ட சுமார் 4,000 பேரை பொலிஸார் கைது செய்தனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

---

அமெரிக்கா

ட்ரம்ப் மீது தொடரப்பட்ட

## வழக்கு தள்ளுபடி



2020ஆம் ஆண்டு, அமெரிக்கா ஜனாதிபதித் தேர்தல் முடிவை மாற்றியமைக்க முயன்றதாக ட்ரம்ப் மீது தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள ட்ரம்ப் மீது பாலியல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. 2020ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவை மாற்றியமைக்க முயன்றதாக டிரம்ப் மீது வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தல் முடிவை மாற்றியமைக்க முயன்றதாக டிரம்ப் மீதான வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறு, சிறப்பு சட்டத்தரணி ஜாக் ஸ்மித் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவர் அளித்த மனுவில், அதிபரிடம் விசாரணை நடத்த அமெரிக்க நீதித் துறைக் கொள்கையில் அனுமதி இல்லை என தெரிவித்திருந்தார்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, ட்ரம்ப் மீதான குற்ற வழக்கைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

---

ஜெருசலேம்

இஸ்ரேல் – ஹிஸ்புல்லா போர் நிறுத்தம்

## விரைவில் ஒப்பந்தம் எட்டப்படும்?

இஸ்ரேல்-ஹிஸ்புல்லாவுக்கு இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னும் ஓரிரு நாட்களுக்குள் எட்டப்படலாம் என்று அமெரிக்காவுக்கான இஸ்ரேல் தூதுவர் மைக் ஹெர்சாக் கூறியுள்ளார்.

தூதுவர் மைக் ஹெர்சாக், இஸ்ரேலிய இராணுவ வானொலிக்கு அளித்த நேர்காணலின் போதே, இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "போர் நிறுத்த ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கு முன் இன்னும் சில பிரச்சினைகள் எஞ்சியுள்ளன. எந்தவொரு ஒப்பந்தமாக இருந்தாலும், அரசாங்கத்தின் ஒப்புதல் தேவை. ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. இன்னும் சில நாட்களில் ஒப்பந்தம் மேற்கொள்ளப் படும்" என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஹிஸ்புல்லா ஒப்பந்த விதிகளை மீறினால், நடவடிக்கை எடுப்பதற்கான உரிமையை வழங்க வேண்டும் என்று இஸ்ரேல் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேலிய படைகளை தெற்கு லெபனானில் இருந்து வெளியேற்ற வேண்டும் என இந்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டில் நடந்த போர், ஐ.நா. சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் முடிவுக்கு வந்தது. ஆனால், இந்த தீர்மானத்தை ஹிஸ்புல்லா கடைப்பிடிக்கவில்லை என்றும் தெற்கு லெபனானில் இருந்து ஹமாஸ் பாணியிலான எல்லை தாண்டிய தாக்குதலை நடத்தலாம் என்றும் இஸ்ரேல் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.



இதேபோல், இஸ்ரேலும் அந்த தீர்மானத்தை மீறியதாக லெபனான் கூறுகிறது.

---

மத்தியப் பிரதேசம்

நள்ளிரவில் வெடித்து சிதறிய வீடுகள்:

## 2 பெண்கள் பலி; ஐவர் காயம்

மத்தியப் பிரதேசம் மாநிலம், முரைனா நகரில், திங்கட்கிழமை (25) நள்ளிரவில், 3 வீடுகள் திடீரென வெடித்துச் சிதறியதில், 2 இரண்டு பெண்கள் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மேலும் இச்சம்பவத்தில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

ரத்தோர் காலனியில் நடந்த இச்சம்பவத்தில், சிலர் இடிபாடுகளுக்குள் சிக்கி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மேலும் வெடிப்புக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை என்று, பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன், வெடிவிபத்துக்கான காரணத்தைக் கண்டறிய தடயவியல் குழுவும் சம்பவ இடத்தில் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

---



இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்:

# தென்னாபிரிக்காவை வீழ்த்துமா இலங்கை?

தென்னாபிரிக்க, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது டேர்பனில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது போட்டியுடன் தொடங்குகின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவதற்கான போட்டியில் இலங்கையும், தென்னாபிரிக்காவும் காணப்படுகின்ற நிலையில் இத்தொடர் முக்கியத்துவம் பெறுகிறது.

தென்னாபிரிக்காவென்றாலே வேகப்பந்துவீச்சுக்கு சாதகமானதா ஆடுகளங்களென்ற நிலையில் குறிப்பிடத்தக்க ஆடுகளங்களை கோருவதில்லையென தென்னாபிரிக்க அணித்தலைவர் தெம்பா பவுமா தெரிவித்திருந்தாலும் ஆரம்பத்தில் டேர்பன் ஆடுகளம் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமானதாகக் காணப்பட்டு பின்னர் மெதுவாகுமெனத் தெரிகிறது.

தென்னாபிரிக்காவைப் பொறுத்த வரையில் மார்கோ ஜன்சன், வியான் முல்டர், கேஷவ் மஹராஜ், ககிஸோ றபாடாவுடன் ஜெரால்ட் கொயட்ஸி களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையைப் பொறுத்த வரையில் மிலான் ரத்னாயக்க, பிரபாத் ஜெயசூரியா, அசித பெர்ணாண்டோவுடன், விஷ்வ பெர்ணாண்டோ களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

---

ஐ.பி.எல். ஏலம்:

வேகப்பந்துவீச்சாளர்களுக்கு

## கிராக்கி

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி. எல்) 2025ஆம் ஆண்டு தொடருக்கான வீரர்கள் ஏலத்தின் இரண்டாம் நாளில் இந்திய வேகப்பந்துவீச்சாளர்களுக்கு மவுஸு காணப்பட்டிருந்தது.

10.75 கோடி இந்திய ரூபாய்களுக்கு புவ்னேஷ்வர் குமாரை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு வாங்கியிருந்ததுடன், 9.25 கோடி இந்திய ரூபாய்களுக்கு தீபக் சஹரை மும்பை இந்தியன்ஸ் வாங்கியிருந்ததுடன், 8 கோடி இந்திய ரூபாய்களுக்கு முகேஷ் குமாரை டெல்லி கப்பிட்டல்ஸ் வாங்கியிருந்தது. ஆகாஷ் டீப்பை 8 கோடி இந்திய ரூபாய்களுக்கு லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் வாங்கியிருந்தது.

இந்நிலையில், 13 வயதான இந்தியாவின் வைபவ் சூரியவன்ஷியை 1.10 கோடி இந்திய ரூபாய்களுக்கு ராஜஸ்தான் றோயல்ஸ் கைச்சாத்திருந்தது.

இதேவேளை, 1.60 கோடி இந்திய ரூபாய்களுக்கு இலங்கையின் நுவான் துஷாரவை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு வாங்கியிருந்தது.

இதுதவிர, இலங்கையில் இன்னும் அறிமுகத்தை மேற்கொள்ளாதன் எஷான் மலிங்கவை சண்றைசர்ஸ் ஹைதரபாத் 1.20 கோடி இந்திய ரூபாய்களுக்கு கைச்சாத்திட்டதுடன், கமிந்து மெண்டிஸை 0.75 கோடி இந்திய ரூபாய்களுக்கும் கைச்சாத்திட்டிருந்தது.



---

நியூசிலாந்து எதிர் இங்கிலாந்து:

## நாளை ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்

நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது கிறைஸ்ட்சேர்ச்சில் நாளை அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கான போட்டியில் நியூசிலாந்தும் காணப்படுகின்ற நிலையில் அவ்வணிக்கு இத்தொடர் முக்கியத்துவமிக்கமானதாகக் காணப்படுகின்றது.

நியூசிலாந்தின் கேன் வில்லியம்சன் அணிக்குத் திரும்பியுள்ள நிலையில் அவரைப் பிரதியிட்ட வில் யங் சிறப்பாகச் செயற்பட்ட நிலையில் சிக்கல் உருவாகியுள்ளது. இந்நிலையில் வில்லியம்சன் விளையாடுவது உறுதியாகியுள்ள நிலையில் டரைல் மிற்செல் அணிக்கு வெளியே செல்லும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

மேலும் இத்தொடரும் ஓய்வு பெறுகின்ற டிம் சௌதி மற்றும் மற் ஹென்றி, வில்லியம் ஓ ரூர்க்கேயுடன் நான்காவது வேகப்பந்துவீச்சாளராக ஜேக்கப் டஃபி களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபக்கமாக இங்கிலாந்தில் சகலதுறைவீரரான ஜேக்கப் பெத்தெல் மூன்றாமிலக்கத்தில் அறிமுகத்தை மேற்கொள்வதோடு, ஒலி போப் விக்கெட் காப்பாளராக ஆறாமிடத்தில் களமிறங்குவதுடன் கிறிஸ் வோக்ஸ், குஸ் அட்கின்ஸன், பிறைடன் கார்ஸுடன் ஷொய்ப் பஷிர் பந்துவீச்சுவரிசையை அமைத்துள்ளனர்.

---

பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

## வெற்றியை நோக்கி மேற்கிந்தியத் தீவுகள்

பங்களாதேஷுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், அன்டிகுவாவில் வெள்ளிக்கிழமை (22) ஆரம்பித்த முதலாவது போட்டியில் வெற்றியை நோக்கி மேற்கிந்தியத் தீவுகள் நகர்கிறது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

மே. தீவுகள்: 450/9 (துடுப்பாட்டம்: ஜஸ்டின் கிறேவ்ஸ் ஆ.இ 115, மிகைல் லூயிஸ் 97, அலிக் அதனஸே 90, கேமார் றோச் 47 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹஸன் மஹ்மூட் 3/87, தஸ்கின் அஹ்மட் 2/76, மெஹிடி ஹஸன் மிராஸ் 2/99, தஜியுல் இஸ்லாம் 1/111)

பங்களாதேஷ்: 269/9 (துடுப்பாட்டம்: ஜாகிர் அலி 53, மொமினுல் ஹக் 50, லிட்டன் தாஸ் 40, தஜியுல் இஸ்லாம் 25 ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 3/69, ஜஸ்டின் கிறேவ்ஸ் 2/34, ஜேடன் சியல்ஸ் 2/42, கேமார் றோச் 1/30, ஷாமர் ஜோசப் 1/55)

மே. தீவுகள்: 152/10 (துடுப்பாட்டம்: அலிக் அதனஸே 42 ஓட்டங்கள். பந்துவீச்சு: தஸ்கின் அஹ்மட் 6/64, மெஹிடி ஹஸன் மிராஸ் 2/31, ஷொரிஃபுல் இஸ்லாம் 1/9, தஜியுல் இஸ்லாம் 1/25)

பங்களாதேஷ்: 109/7 (வெ.இ: 334 ஓட்டங்கள்) (துடுப்பாட்டம்: மெஹிடி ஹஸன் மிராஸ் 45 ஓட்டங்கள். பந்துவீச்சு: கேமார் றோச் 3/20, ஜேடன் சியல்ஸ் 3/31, ஷாமர் ஜோசப் 1/22)

---

## தேசிய மட்ட கராத்தேயில் புத்தளம் பிரகாசிப்பு

எம்.யூ.எம்.சனூன்

அகில இலங்கை சோட்டோகான் கராத்தே சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட தேசிய மட்டத்திலான கராத்தேயில் புத்தளம் மாணவர் பிரகாசித்துள்ளனர்.

கொழும்பு சுகதாஸ உள்ளக விளையாட்டரங்கில் ஞாயிற்றுக்கிழமை (24) நடைபெற்ற இப்போட்டியில் வொஷி சோட்டோகான் கராத்தே டூ சங்கத்தின் மாணவர்களே பிரகாசித்துள்ளனர்.

புத்தளம் பாத்திமா மகளிர் கல்லூரியில் 08ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி எம்.ஆர்.எம்.அம்னா, 13 வயதுக்குட்பட்ட பிரிவில் தங்கப் பதக்கத்தை பெற்றுள்ளார்.

நாகவில்லு-எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகாவித்தியாலய மாணவன் எம்.ஆர்.ரிப்கி அஹமட் 09 வயதுக்குட்பட்ட பிரிவில் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார்.

மதுரங்குளி - எக்ஸலன்ஸ் பாடசாலை மாணவி ஆர்.ஷெபா, 14 மற்றும் 15 வயதுக்குட்பட்ட பிரிவில் மூன்றாமிடங்களைப் பெற்றுள்ளார்.

இம்மாணவருக்கான பயிற்சிகளை டபிள்யூ. எஸ்.கே.ஏ.கராத்தே சங்கத்தின் பிரதான போதனாசிரியரும், பயிற்றுவிப்பாளருமாகிய சிஹான் எம். பைரோஸ் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 27 நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.